DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**S.T.C.2646/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | செண்பகபாண்டியன் | Age | : | 40 |
| S/o | : | முத்து கருங்கு | Occupation | : | விவசாயம் |
| Village | : | மேலமடை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 24–th day of July 2023.

**24.07.2023**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் மேலமடையில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எங்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எதிரிகளால் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. **(அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 03.04.2022ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான் எனது ஊர் பிள்ளையார் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது 1வது எதிரி என் மகனின் பிறப்பை பற்றி அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. அதை நான் ஏன் இப்படி பேசுகிறாய் என்று கேட்டதற்கு 1வது எதிரி அப்படித்தான் பேசுவேன் என்று என்னை தரக்குறைவாக பேசி கையால் அடித்து கீழே தள்ளிவிட்டார் என்றால் சரியல்ல. அங்கிருந்த 2வது எதிரி குடத்தை எடுத்து எனது தலையில் அடித்தார் என்றால் சரியல்ல. 3 வது எதிரி கம்பால் எனது வலது கையில் அடித்தார் என்றால் சரியல்ல. பின்பு எதிரிகள் உன்னை அடித்தால் யாருடா கேட்பா என்று பேசினார்கள் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :** இல்லை

**மறு விசாரணை** : இல்லை

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**S.T.C.2646/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | முத்துக்குமார் | Age | : | 38 |
| S/o | : | மதுரை வீரன் | Occupation | : | மரம் வெட்டும் தொழில் |
| Village | : | மேலமடை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 24-th day of July 2023.

**24.07.2023**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் மேலமடையில் குடியிருந்து கொண்டு மரம் வெட்டும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள். அ.சா.1 ஐ தெரியும். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 03.04.2022ம் தேதி மாலை 05.00 மணியளவில் அ.சா.1 எங்கள் ஊர் பிள்ளையார் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது 1வது எதிரி அ.சா.1ன் மகனின் பிறப்பை பற்றி அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. அதை அ.சா.1 ஏன் இப்படி பேசுகிறாய் என்று கேட்டதற்கு 1வது எதிரி அப்படித்தான் பேசுவேன் என்று அ.சா.1 ஐ தரக்குறைவாக பேசி கையால் அடித்து கீழே தள்ளிவிட்டார் என்றால் சரியல்ல. அங்கிருந்த 2வது எதிரி குடத்தை எடுத்து அ.சா.1ன் தலையில் அடித்தார் என்றால் சரியல்ல. 3வது எதிரி கம்பால் அ.சா.1ன் வலது கையில் அடித்தார் என்றால் சரியல்ல. பின்பு எதிரிகள் அ.சா.1 ஐ பார்த்து உன்னை அடித்தால் யாருடா கேட்பா என்று பேசினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சண்டையை நானும், சேது என்பவரும் விலக்கிவிட்டோம் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :** இல்லை

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**S.T.C.2646/2022**

| Deposition of the | : | PW3 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | மோகன் | Age | : | 37 |
| S/o | : | கோபால்ராமு | Occupation | : | கொத்தனார் |
| Village | : | மேலமடை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 24-th day of July 2023.

**24.07.2023**
**(எதிரிகள் ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் மேலமடையில் குடியிருந்து கொண்டு கொத்தனால் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள். அ.சா.1 எனது அண்ணன் ஆவார். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 03.04.2022ம் தேதி மாலை 05.00 மணியளவில் அ.சா.1 எங்கள் ஊர் பிள்ளையார் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது 1வது எதிரி அ.சா.1ன் மகனின் பிறப்பை பற்றி அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. அதை அ.சா.1 ஏன் இப்படி பேசுகிறாய் என்று கேட்டதற்கு 1வது எதிரி அப்படித்தான் பேசுவேன் என்று அ.சா.1 ஐ தரக்குறைவாக பேசி கையால் அடித்து கீழே தள்ளிவிட்டார் என்றால் சரியல்ல. அங்கிருந்த 2வது எதிரி குடத்தை எடுத்து அ.சா.1ன் தலையில் அடித்தார் என்றால் சரியல்ல. 3வது எதிரி கம்பால் அ.சா.1ன் வலது கையில் அடித்தார் என்றால் சரியல்ல. பின்பு எதிரிகள் அ.சா.1ஐ பார்த்து உன்னை அடித்தால் யாருடா கேட்பா என்று பேசினார்கள் என்றால் சரியல்ல. காயம்பட்ட அ.சா.1ஐ நான் மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நான் கேள்விபட்டேன் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :** இல்லை
**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II, RAMANATHAPURAM

**S.T.C.2646/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | முருகானந்தம் | Age | : | 27 |
| S/o | : | மயில்ராமன் | Occupation | : | சார்பு ஆய்வாளர், ஏர்வாடிதர்ஹா காவல் நிலையம் |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 24–th day of July 2023.

**24.07.2023**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடிதர்ஹா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கை பதிவு செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. சந்திரசேகரன் அவர்கள் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியால் வழக்கு கோப்பை பார்த்து அவருக்காக சாட்சியம் அளிக்க வேண்டுகோள் கடிதம் சமர்ப்பித்து நீதிமன்றத்தின் உத்தரவு பெற்று சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.04.2022–ம் தேதி காலை 10.00 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. சந்திரசேகரன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த செண்பகபாண்டியன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப ஏர்வாடிதர்ஹா காவல் நிலைய குற்ற எண்.65/2022 பிரிவுகள் 294(b), 323 இதசவாக வழக்குப்பதிவு செய்துள்ளார்.

2. **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (புகார் மனு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மூக்கையா மற்றும் சரவணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வைமகஜர் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்பு சாட்சிகளான செண்பபாண்டியன், சேது, முத்துக்குமார், மோகன், மூக்கையா மற்றும் சரவணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 17.04.2022ம் தேதி 17.15 மணிக்கு மேலமடை பேருந்து நிறுத்தம் அருகே வைத்து எதிரிகளை காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த

மருத்துவர் திருமதி. அருள் மொழி செல்வி என்பவரை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (**அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரிகளின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**மறுவிசாரணை :** இல்லை

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**